# அற்புதமான பாட்டி



கண்ணியமாக வாழ்ந்து, உலகைவிட்டு விலகும்
ஓர் உண்மை கதையை மையப்படுத்தியது.

Life Books





பேரக்குழந்தைகள் தங்களுடைய அற்புதமான குணங்களில் 99 சதவீதம் பாட்டிகளிடம் இருந்து பெறுகிறார்கள் என்பது உண்மைதான்.

என்னுடைய பாட்டியும் மிக அற்புதமானவர். அவருடைய பெயர் ஸை கீ. அது அவருக்கு பொருத்தமான பெயரே ஏனெனில் எங்களனைவரையும் விட, மனதளவில் அவர் மிகவும் வலிமையானவர்.

மருத்துவர் அவருக்கு பெருங்குடல் புற்றுநோய் இருப்பது குறித்த தகவலை தெரிவித்தப்போது, என் பாட்டி சொன்ன முதல் வார்த்தைகள், “நான் இனிமேல் எது வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் சாப்பிடலாம்,” என்பதுதான்.

அப்படித்தான் அவர் அந்த செய்தியை ஏற்றுக் கொண்டார்.






என்னுடைய பாட்டிதான் என்னை வளர்த்தார். நான் மனதளவில் பாதிப்படைந்தால் என்னை திடப்படுத்தினார். ஒருமுறை, நான் அம்மாவின் பிரியமான பூ ஜாடியை உடைத்தபோது, அதனை பக்கத்து வீட்டுப் பூனைதான் உடைத்தது என்று என்னோடு கூட்டுச் சேர்ந்து அம்மாவிடம் சொல்லி என்னை பாதுகாத்தவர். அவர்தான் என்னுடைய மிக நெருங்கிய சிநேகிதி.

அதனால் அவர் தன்னுடைய மீதமுள்ள நாட்களை கண்ணியத்துடன் கழிக்க வேண்டும் என்று சொன்னபோது, அவர் அந்நாட்களை நிறைவாக கழிக்க நான் உதவ வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டேன். ஆனால் குடும்பத்தில் கடைக்குட்டியாகவும் மிகச்செல்லமாகவும் வளர்ந்த எனக்கு, பராமரிப்பாளர் ஆவது பற்றி ஒன்றுமே தெரியாது. எங்கிருந்து ஆரம்பிப்பது அல்லது யாரிடம் உதவி கேட்பது என்று தெரியவில்லை.



பாட்டியின் புற்றுநோய் மருத்துவர் ஓர் இல்ல அந்திமகாலப் பராமரிப்பு சேவையை பரிந்துரைத்தார். சில நாட்கள் கழித்து, அந்த பராமரிப்புக் குழுவினர் எங்கள் வீட்டுக்கு வருகை தந்தனர்.

அங்கிருந்து டாக்டர் டோனுடான என்னுடைய நற்புறவு தொடங்கியது. நான் அறிந்து கொள்ள வேண்டிய அனைத்தையும் அவர் கற்றுத் தந்தார். பாட்டியின் புண்களுக்கு கட்டுப்போடுவது, படுக்கையிலிருந்து பாதுகாப்புடன் மாற்றுவது, சூழ்நிலை கடினமாகும்போது எவ்வாறு அவரை உற்சாகத்துடன் வைத்திருப்பது போன்றவற்றை டாக்டர் கற்றுக்கொடுத்தார். என்னுடைய பாட்டி தம் வாழ்க்கையின் இறுதி நாட்களை கண்ணியத்துடன் வாழ எங்களைத் தயார்ப்படுத்திய பராமரிப்புக்  குழுவினருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.





நான் ஒருமுறை பராமரிப்பு சேவைப் பயிற்சி முடிந்து வீடு திரும்பியபோது, நான் என்ன கற்றுக்கொண்டேன் என்பதைத் தெரிந்துகொள்ள பாட்டி ஆர்வமாக இருந்தார். நான் சொல்லி முடித்ததும் அவர் உரக்கச் சிரித்துக்கொண்டே, ”அப்படியானால் நீ என் மலத்தை அகற்ற வேண்டும் மெலிஸா!!” என்றார்.

விசித்திரமானவர்தான், ஆனால் அவர்தான் என் பாட்டி.



அடுத்து வந்த சில மாதங்கள் எளிமையானவையாக இருக்கவில்லை. பராமரிப்புக் குழுவினர் வாரத்திற்கு ஒருமுறை பாட்டியை பரிசோதிக்க வந்தார்கள். அவர்களுக்கு பாட்டியின் மேல் பிரியம் வளரத் தொடங்கியது. அதே பிரியத்துடன் பாட்டி எப்போதும் டாக்டர் டோனின் வருகைக்காகக் காத்திருக்க ஆரம்பித்தார்.

நிலைமை மோசமடைந்தபோது, டாக்டர் டோனும் பராமரிப்பு குழுவினரும் உடல், மன ரீதியாக மிகுந்த உதவி புரிந்தனர். அவர்கள் இல்லாவிட்டால், நான் என்ன செய்திருப்பேன் என்று தெரியாது.

ஒரு மதிய நேரம், பாட்டி மிகுந்த வலியால் முனகிக் கொண்டிருந்தது எனக்குத் தெளிவாக நினைவிருக்கிறது. பாட்டியைப் போன்ற மனோதிடம் உள்ள பெண்மணியை கூட வலி பலவீனப்படுத்த மனம் உடைந்து போனேன். அத்தருணம் வலி பொறுக்கமுடியாமல் தவித்தார் என்று சொல்ல முடியும். ஏனெனில், பாட்டி தன்னுடைய பலவீனமானத் தோற்றத்தை பிறருக்குக் காட்டியதில்லை.

நான் என்ன செய்வது என்றறியாமல், பயத்தால் களைத்துப்போய் இருந்தேன். அந்தக் கையாலாகாத நிலையில் டாக்டர் டோனின் உதவியை நாட முடிவெடுத்தேன். அவர் என்னை சாந்தப்படுத்தி, சரியான அளவு மருந்தைக் கொடுத்து, வலியைப் போக்க சொல்லிக் கொடுத்தார்.

மறுநாள் டாக்டர் டோனும் பராமரிப்பு குழுவினரும் பாட்டியின் மருந்தை மாற்றி, அவரின் ஆரோக்கியத்தை உறுதி செய்தனர். அவர்கள் தங்களது சேவையை மனமார புரிந்தனர்.





வேலைக்கு செல்லும்போதெல்லாம் பாட்டியை அந்திமகால நாள் பராமரிப்பு நிலையத்தில் விட்டுச் செல்வேன். அவருக்கு அங்கு செல்ல பிடிக்கும் ஏனெனில் அவருக்கென ஒரு நண்பர் வட்டம் அங்கு உள்ளது.

நாள் பராமரிப்பு நிலையத்தில் அவர் ஒரு நட்சத்திரமாகவும் அதன் உயிர்துடிப்பாகவும் இருந்தார். அவர் எல்லோரிடமும் கதைகள் சொல்வார், இளைய ஊழியர்களுக்கு காதல் அறிவுரைகளை தருவார் மற்றும் வீட்டுக்குப் போக வேண்டிய நேரம் வரும் வரை இடத்தையே கலகலவென்று வைத்து இருப்பார். அங்கே அவர் அவராகவே இருந்தார். தாதியர்களும் தொண்டூழியர்களும் கடமைகளுக்கு அப்பால் பாட்டியின் சௌகரியத்தையும் மகிழ்ச்சியையும் உறுதி செய்தனர்.

அவர் அங்கே ஒரு புற்றுநோய் நோயாளி போல அல்லாது ஒரு 'ராக்ஸ்டார்' போல இருந்தார்.







நிலைமை மோசமடைந்தபோதிலும் நோயின் தாக்கம் அவரை உடைத்ததாக இல்லை. நான் கவலையடையும்போதெல்லாம் மனதை திடப்படுத்திக்கொண்டு தைரியமாக இருக்கும்படி கூறுவார்.

நான் நொடிந்துபோனதை டாக்டர் டோனிடமும் பராமரிப்பு குழுவினரிடமும் கேலி செய்யும் விதமாக பகிர்ந்துகொண்டார். இது பிறருக்கு இரக்கமற்ற செயலாக தோன்றலாம் ஆனால் என் பாட்டி இவ்வாறு வெளிப்படையாக இருப்பதுதான் என் விருப்பம்.



பாட்டியின் இறுதி நாட்கள் நெருங்க, அவரின் ஞாபக சக்தி குறைய ஆரம்பித்தது. எங்களிடம் ஆயிரம் முறை கூறிய கதைகளைக் கூட மறந்துவிடுவார். அவரது குழந்தைப் பருவம் முதல் ஒரு பாட்டு அவரின் விருப்பத்திற்குரியதாக இருந்தது. ஆனால் அதன் சில வரிகளே அவரது நினைவில் இருந்தன - அதன் தலைப்பு அவருக்கு மறந்துவிட்டது.

அது பல நாட்களாக அவரை மிகவும் வருத்தியது.அதைப் பற்றி  டாக்டர் டோனிடம் பலமுறை அவர் பகிர்ந்துகொள்வார். எல்லா உரையாடல்களிலும் அதனை தவறாமல் கூறிவிடுவார்.

பாட்டி சொன்னதையே திரும்ப திரும்ப சொன்னாலும், டாக்டர் டோனும் பராமரிப்பு குழுவினரும் அவரை நகைச்சுவை படுத்துவதிலேயே மும்முரம் காட்டினர். அடுத்தமுறை பாட்டியை சந்திக்க வரும்போது, ஒரு இன்ப அதிர்ச்சி காத்திருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.



அடுத்த வருகையே அவர்களின் கடைசி வருகையாகிப் போனது. டாக்டர் டோனும் பராமரிப்பு குழுவினரும் யூகலேலே இசை கருவியுடன் வீட்டுக்கு வந்தனர். நான் மிகவும் குழம்பி விட்டேன். அவர்கள் பாட்டியிடம் கண்களை மூடிக்கொள்ளுமாறு கேட்டனர். அப்போது அவர் மிக பலவீனமாக இருந்தார், அவர்களின் இசையை உட்கார்ந்து ரசிக்க முடியாத நிலையில் இருந்தார்.

அவர்கள் பாட்டியின் அருகில் தங்களின் இசை சாதனங்களைப் பொருத்தி, ஒரு பாடலை பாடத் தொடங்கினர். அவர் கண்களில், மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைத்திருக்கிறார் என்பது தெரிந்தது. ”அதே பாட்டு, அதே பாட்டு” என்று முணுமுணுத்தவர், கூடவே தானும் பாடத் தொடங்கினார்.

டாக்டர் டோனும் அந்திமகால பராமரிப்பு குழுவினரும் தீவிர தேடலில் பாட்டியின் குழந்தைப் பருவ விருப்பப்பாடலை கண்டறிந்தனர். அவரது கடைசி ஆசையை அவர்கள் நிறைவேற்றினர். நீண்ட நாட்களுக்குப் பிறகு பாட்டி, தனது வலியை மறந்து, மிகவும் மகிழ்ச்சியடைந்திருப்பதை பார்த்ததும், என்னால் ஒரு குழந்தையைப் போல் தேம்பியழாமல் இருக்க முடியவில்லை.





முகத்தில் புன்னகையோடு பாட்டி ஒருசில நாட்களுக்குப் பிறகு காலமானார். பிரியாவிடை கொடுப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருந்தது, இருவேறு மனநிலையில் நான் இருந்தேன். ஏனென்றால், தம் இறுதி நாட்களில் மகிழ்ச்சியான, கண்ணியமான ஒரு நிறைவான வாழ்க்கையை அவர் நீடித்தார்.

**வலிதணிப்புக் கவனிப்புச் சேவைகள் எதற்கு?**

மருத்துவர்கள், தாதியர்கள், சமூக ஊழியர்கள், ஆலோசகர்கள், பயிற்சிபெற்ற தொண்டூழியர்கள் அடங்கிய பன்முகக் குழுவால் வலிதணிப்புக் கவனிப்புச் சேவைகள் வழங்கப்படுகிறது. உடலியக்க, மன, சமூக, ஆன்மிக ரீதியாக நோயாளிகளுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஆறுதலும் ஆதரவும் இக்குழுவினர் வழங்குகின்றனர் - டாக்டர் டோனும் அவரது குழுவினரும் மெலிஸாவுக்கும் அவரது பாட்டிக்கும் வழங்கிய சேவை போலவே.

வாழ்க்கையின் இறுதி காலக்கட்டத்தில், வாழ்க்கை தரத்தில் கவனம் செலுத்த நோயாளிகள் வலிதணிப்புக் கவனிப்புச் சேவைகளை தெரிவு செய்கின்றனர். இது வாழ்க்கையை விட்டுக்கொடுப்பதற்காக அல்ல.இல்ல பராமரிப்பு, நாள் பராமரிப்பு நிலையம், உள்நோயாளி பராமரிப்பு மற்றும் ஆலோசனை சேவைகள் போன்றவற்றில் வலிதணிப்புக் கவனிப்புச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

வாழ்க்கையின் இறுதி காலக்கட்டத்தை கண்ணியமான முறையில் அதிக வலி இல்லாமல் நீடிப்பதற்கு, முன்கூட்டியே திட்டமிட்டு, அதற்கான முடிவுகளை பிறரிடம் தாமதமின்றி தெரிவித்தல் முக்கியம். ஆரோக்கியமாகவும் சீரான மன நிலையில் இருக்கும்போதே முடிவெடுப்பது உகந்தது.



## சிங்கப்பூர் அந்திமகாலப் பராமரிப்பு மன்ற பின்னணி

கடந்த 1995 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சிங்கப்பூர் அந்திமகாலப் பராமரிப்பு மன்றம், பதிவுசெய்யப்பட்ட அறநிறுவனமாகவும் பொது பண்புக் கழகமாகவும் விளங்குகிறது. அந்திமகாலப் பராமரிப்பு, வலிதணிப்புக் கவனிப்புச் சேவைகளை சிங்கப்பூரில் வழங்கும் அமைப்புகளுக்கு பிரதிநிதியாக நாம் விளங்குகிறோம்.

கடுமையான நோய்களால் பாதிக்கப்படுபவர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் அவர்களின் நெருங்கியவர்களுக்கு ஆதரவு வழங்குவதிலும் சிங்கப்பூர் அந்திமகாலப் பராமரிப்பு மன்றம் கடப்பாடு கொண்டுள்ளது.

இந்த மின் புத்தகத்தை library.singaporehospice.org.sg என்ற இணையப் பக்கத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**மேல் விவரங்களுக்கு:**

சிங்கப்பூர் அந்திமகாலப் பராமரிப்பு மன்றம்
535 Kallang Bahru, #03-09 GB Point
சிங்கப்பூர் 339351

தொலைபேசி: 6538 2231
மின்னஞ்சல்: info@singaporehospice.org.sg
இணையதளம்: www.singaporehospice.org.sg

Leave WELL | வழங்குபவர்கள்: SINGAPORE HOSPICE COUNCIL

வாழ்க வளமுடன். விடை பெறுக நலமுடன்



பதிப்புரிமம்©2019 சிங்கப்பூர் ஹாஸ்பைஸ் கவுன்சில்.
எல்லா உரிமைகளும் காப்புடைமையானவை. இப்பிரசுரத்தின் எப்பகுதியையும், பதிப்புரிமதாரரின் எழுத்துப்பூர்வ முன்னனுமதி இல்லாமல், மின்னணுவியல், இயந்திரவியல், ஒளிநகலெடுப்பு, பதிவுசெய்தல் அல்லது வேறு ஏதேனும் என எவ்வடிவிலும் அல்லது எவ்வகையிலும் மறு உருவாக்கம் செய்யதோ, மீட்கத்தக்க அமைப்பில் பதிவுசெய்யதோ கூடாது.

மறுபதிப்பு ஏப்ரல் 2020, மார்ச் July 2022

ISBN (சாஃப்ட்கவர்): 9789811412868
ISBN (மின்-புத்தகம்): 9789811412875

உருவாக்கியவர் BLKJ. படவிளக்கமளித்தவர் Diigii Daguna.
இந்தப் புத்தக உருவாக்கத்திற்கு உதவிய பங்களித்தவர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு மேலான நன்றியினை உரித்தாக்குகிறோம்.

Life Books